**யாழ். வலயக் கல்வித் திணைக்களத்தின் அனுசரணையுடன்**
**தொண்டைமானாறு வெளிக்கள நிலையம் நடாத்தும்**

# Field Work Centre

## தவணைப் பரீட்சை, யூன் - 2016

## Term Examination, June - 2016

FWC

| தரம் :- 13 (2016) | கிறிஸ்தவ நாகரிகம் – II | மூன்று மணித்தியாலங்கள் |
|---|---|---|

❖ **பகுதி 1 இல் எவையேனும் இரண்டு வினாக்களையும், பகுதி 11 இல் எவையேனும் மூன்று வினாக்களையும் தெரிவு செய்து எல்லாமாக ஐந்து வினாக்களுக்கு விடை தருக.**

### பகுதி 1

01) i. ஆரம்பக் கிறிஸ்தவர்களின் சமூக வாழ்வியலில் காணப்பட்ட நான்கு பண்புகளைக் குறிப்பிடுக.

ii. டிடாக்கேயின் போதனைகள் நான்கு தருக.

iii. கிறிஸ்து மலைப்பொழிவில் எத்தகைய விடயங்களில் பழைய ஒழுங்கு முறைகளை புதிய விதத்தில் தந்துள்ளார் என்பதற்கு நான்கு எடுத்துக்காட்டுக்கள் தருக.

iv. அரிஸ்டோட்டில் முன்வைத்த நான்கு காரணகாரியத் தொடர்புகளைத் தருக.

v. உரோமையரின் சமூக அமைப்புப் பற்றி நான்கு விடயங்கள் தருக.

02) i. மிஸ்னா நூலில் குறிப்பிட்டுள்ள செனத்திரின் சங்க விதிமுறைகள் நான்கு தருக.

ii. கிறிஸ்துவின் இரண்டாம் வருகைக்காக காத்திருந்த மக்கள் வாழ்வில் செல்வாக்குச் செலுத்திய நான்கு விடயங்களைக் குறிப்பிடுக.

iii. கிரேக்க நாகரிகத்தின் பல்துறைசார் பங்களிப்புக்கள் நான்கு தருக.

iv. மறுமலர்ச்சிக்கால சித்திரக்கலைஞர்கள் நால்வரைக் குறிப்பிட்டு, இக்கால ஓவியக்கலைகள் நான்கு தருக.

v. சீர்திருத்தம் அடையாதவர்கள் என அழைக்கப்பட்ட மக்களின் வாழ்வில் காணப்பட்ட நான்கு முற்போக்கான பண்புகளைக் குறிப்பிடுக

03) i. புரட்டஸ்தாந்து சீர்திருத்தத்தின் பின் இயேசு சபையினர் கத்தோலிக்க மறையை அறிமுகம் செய்த நாடுகள் நான்கு தருக

ii. மனித உரிமைகள் துறையில் தீவிரமாக செயற்பட்ட, இலக்கியம் மற்றும் சினிமாத் துறையில் தங்கள் பங்களிப்பை நல்கிய நான்கு இலங்கைக் கிறிஸ்தவர்களின் பெயர்களை வெவ்வேறாகத் தருக.

iii. குருக்களை மையப்படுத்திய பிரமிட் அமைப்பு முறையினை எடுத்துக்காட்டும் நான்கு நிலைகளைத் தருக.

iv. ஆசிய ஆயர் பேரவையின் உறுப்பினர்களாகப் பங்கு கொள்ளும் நான்கு நாடுகளையும், அப்பேரவையின் நிர்வாக அமைப்புக்கள் நான்கையும் பெயரிடுக.

v. கிறிஸ்தவ ஒன்றிப்புப் பயணத்தில் ஏற்படும் சவால்கள் இரண்டையும், கிறிஸ்தவ ஒன்றிப்பிற்காக செயற்பட்ட நான்கு நபர்களையும் பெயரிடுக.

## பகுதி 11

04) i. கிறிஸ்தவத்தின் ஆரம்பத்தால் எவ்வாறு புதிய சமூகம் உருவாக்கப்பட்டது என்பதை விபரிக்குக.

ii. மறுமலர்ச்சியின் காரணமாக மத்திய கால சமூகத்தில் ஏற்பட்ட மாற்றங்களை விபரிக்குக.

iii. ஆரம்பகாலத் திருச்சபை மனித நேயப்பணிகளில் ஈடுபட்ட விதத்தினை விபரிக்குக

iv. இன்றைய திருச்சபை மனித நேயப்பணிகளில் ஈடுபட்டு வரும் விதத்தினை எடுத்துக்காட்டுகள் மூலம் விளக்குக.

05) i. பலஸ்தீனத்திற்கு அண்மையிலுள்ள நாடுகளில் அக்காலத்தில் காணப்பட்ட நாகரிகங்களை அறிமுகம் செய்து அவற்றுள் ஒன்றினை விபரிக்குக.

ii. இந்நாகரிகங்கள் யூதநாகரிகத்தின் முன்னேற்றத்தில் ஏற்படுத்தியுள்ள செல்வாக்கை விபரிக்குக.

iii. கிறிஸ்தவத்தில் கிரேக்க நாகரிகத்தினால் ஏற்பட்டுள்ள செல்வாக்கினை விபரிக்குக

iv. கிறிஸ்தவத்தில் உரோமைய நாகரிகம் செல்வாக்குச் செலுத்தியுள்ள நான்கு விடயங்களைக் குறிப்பிட்டு அவற்றுள் ஒன்றின் தாக்கம் பற்றி விபரிக்குக.

06) i. இயேசுவின் காலத்தில் யூதர்கள் மத்தியில் வழக்கிலிருந்த பலி, செபவாழ்வு பற்றி விபரிக்குக

ii. இயேசுவின் காலத்தில் நிலவிய ஓய்வுநாள் சடங்கு முறைகளை விபரித்து இயேசு இதன் மட்டில் கொண்டிருந்த மனப்பாங்கை விளக்குக

iii. இயேசு வாழ்ந்த காலத்து யூத பிரபுக்களின் ஆடம்பர வாழ்வு பற்றி விளக்குக

iv. யூத சமூகத்தில் பெண்கள் எவ்வாறாக ஆண்களை விட கீழ் நிலையிலுள்ளவர்கள் எனக் கருதப்பட்டார்கள் என்பதனை விளக்குக

07) i. பிலிப்பியர் திருமடலில் குறிப்பிட்டுள்ளபடி புனித பவுல் தாழ்ச்சி பற்றிக் கூறும் படிப்பினைகளை விபரிக்குக

ii. இறந்தோரின் உயிர்ப்பு தொடர்பாக கிறிஸ்தவர்கள் எதிர்நோக்கிய பிரச்சினைகளைக் குறிப்பிட்டு, இது தொடர்பாக புனித பவுலின் படிப்பினைகளை விளக்குக.

iii. கிறிஸ்தவ சுதந்திர காலத்தில் தோற்றம் ஆலய அமைப்பு முறைகளைக் குறிப்பிட்டு அவற்றுள் ஒன்றை விபரிக்குக.

iv. இன்றைய கிறிஸ்தவ இசை மரபிற்கு அடிப்படையாக அமைந்த கிரகோரியார், பொலிபோனி இசைமுறையை விபரிக்குக

08) i. இலங்கையின் கல்வி வளர்ச்சியில் பிரான்சிஸ்கன் சபையினரின் கல்வி நடவடிக்கைகளை விளக்குக.

ii. 1960இல் பாடசாலைகள் அரசமயமாக்கப்பட்டதால் ஏற்பட்ட சாதக, பாதக நிலைகளை விபரிக்குக

iii. ஆயர் கிறிஸ்தோப்பர் பொஞ்சின் அடிகளார் இலங்கையின் கல்வி வளர்ச்சிக்கு ஆற்றிய பங்களிப்பை விபரிக்குக

iv. இலங்கையின் கல்வி வளர்ச்சிக்கு இன்றைய திருச்சபை ஆற்றியுள்ள பங்களிப்பை விபரிக்குக.